# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**<u>முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 10 /2018</u>**

திரு. ஆ. காசிக்கனி,
4/360/2, 10வது தெரு,
முத்தம்மாள் காலனி,
தூத்துக்குடி – 2 . . . மேல்முறையீட்டாளர்
(திரு. C. செல்வராஜ்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டையபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001. . . . எதிர்மனுதாரர்
(திரு. A. சரவணன், மேற்பார்வை பொறியாளர் /
தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம்(i/c)

**<u>கேட்புரை நாள் : 12–6–2018</u>**

**<u>ஆணை நாள் : 03.09.2018</u>**

திரு. ஆ. காசிக்கனி, 4/360/2, 10வது தெரு, முத்தம்மாள் காலனி, தூத்துக்குடி – 2 அவர்களின் 3.3.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.10/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.6.2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

மேல்முறையீட்டாளர் DCW இல் மின் கம்பம் இடமாறுதல் செய்யப்பட்ட பணிகள் முடிந்த நிலையிலும், செய்யப்பட்ட பணிகளின் அடிப்படையில் தனக்கு திருப்பித் தரவேண்டிய தொகையினை திரும்ப தருமாறு கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம் :</u>**

**2.1** மேல்முறையீட்டாளர் அவருடைய வீட்டின் மேல் செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றித் தருமாறு **22.9.2016** அன்று பதிவுக்கட்டணம் ரூ.**500/–**ஐ நகர்/கீழூர்/தூத்துக்குடி மின் வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்தார். மேற்படி விண்ணப்பதாரரின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு உயரழுத்த மின்பாதையை மாற்றியமைப்பதற்கான மதிப்பீடு மேற்பார்வை பொறியாளர் அவர்களால் **5.12.2016** அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அனுமதி எண்.SE/TEDC/AEE/GL/ JE.1/14, 696/s/16-17 dt.**5.12.2016.** மேற்கூறிய மதிப்பீட்டின்படி விண்ணப்பதாரர் மின்பாதை மாற்றுவதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.**3,84,640/–**ஐ விண்ணப்பதாரர் **2.1.2017** அன்று செலுத்தியுள்ளார்.

**2.2** மேற்கொண்ட பணிகள் முடிந்து ஒரு வருடம் கடந்த நிலையில் மேற்படி பணிகளுக்கான மறு மதிப்பீடு தயார் செய்து அதிகமாகப் பெற்ற பணத்தை வட்டியுடன் திரும்பப் பெற்றுத் தரக்கோரி எதிர்மனுதாரரான உதவி பொறியாளர்/விநியோகம்/ நகர் /கீழூர் அவர்களிடம் மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.3** இது சம்பந்தமாக தலைவர் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் அவர்களிடம் **28.11.2017** நாளிட்ட தன்னுடைய முறையீட்டை சமர்ப்பித்துள்ளார். ஆனால், மன்றம் அவருடைய முறையீட்டிற்கு ஐம்பது நாட்கள் ஆகியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று **3.3.2018** நாளிட்ட தன்னுடைய மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார். அம்மனு மேல்முறையீட்டு மனு எண்.**10/2018** ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>**

**3.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டின் மேல் செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றித் தருமாறு DCW முறையில் விண்ணப்பித்ததின் அடிப்படையில் மதிப்பீடு தொகை நிர்ணயிக்கப்பட்டு அத்தொகையை கட்டச் சொன்னதின் அடிப்படையில் ரூ.**3,84,640/–**க்கான தொகை **02.01.2017** அன்று DEMAND DRAFTஆக செலுத்தப்பட்டது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அம்மின்பாதையை மாற்றியமைக்காமல் காலம் தாழ்த்தி **2017** மார்ச் மாதத்தில் புதிய மின்பாதை அமைத்து பழைய மின்பாதையை கழற்றி எடுத்து விட்டார்கள்.

3.2 மேற்சொன்ன பணிகள் முடிந்து அடுத்த நிதியாண்டும் வந்துவிட்டது. இருந்தாலும் மேற்படி பணிகளுக்கான புதிய மதிப்பீடு தயார் செய்து மேல்முறையீட்டாளரிடம் அதிகமாகப் பெற்ற பணத்தை வட்டியுடன் திரும்பப் பெற்றுத் தரக்கோரி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

4.1 தூத்துக்குடி நகர் கோட்டம், நகர் வடக்கு உபகோட்டம், நகர் கீழூர் பிரிவிற்குட்பட்ட முத்தம்மாள் காலணி, 10வது தெரு, கதவிலக்கம் 3/360–2ல் வசித்து வரும் திருமதி. எம். காசிக்கனி, என்பவருடைய வீட்டிற்கு மேல் சென்ற உயரழுத்த மின்பாதையை மாற்றித் தருமாறு விண்ணப்பித்து 22.9.2016 அன்று பதிவுக்கட்டணம் ரூ.500/– நகர்/கீழூர் தூத்துக்குடி அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்.

4.2 மேற்படி விண்ணப்பதாரரின் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு உயரழுத்த மின்பாதையை மாற்றியமைப்பதற்கான மதிப்பீடு மேற்பார்வை பொறியாளர் அவர்களால் 5.12.2016 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய மதிப்பீட்டின்படி விண்ணபதாரர் மின்பாதை மாற்றுவதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.3,84,640/–ஐ 02.01.2017 அன்று நகர் /கீழூர் அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்.

4.3 அதன் தொடர்ச்சியாக மேற்படி பணியை மேற்கொள்வதற்குப் பணி ஆணை 9.1.2017 அன்று பெறப்பட்டு 10.1.2017 அன்று உதவி செயற்பொறியாளர்/கட்டுமானம் மற்றும் மேம்பாடு/தூத்துக்குடி அவர்களிடம் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டது.

4.4 மேற்படி பணி கட்டுமானப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு 26.3.2017 அன்று நிறைவு பெற்று விண்ணபதாரரின் மின்பாதையை மாற்றியமைப்பதற்கான கோரிக்கை பூர்த்தி செய்யப்பட்டது.

4.5 மேற்படி பணியை மேற்கொள்ளும்போது ஒருசில தளவாட சாமான்கள் உபபண்டக சாலையில் பெறப்பட இயலாத நிலையிலும் பாதுகாப்பை முன்னிட்டு விண்ணபதாரரின் நலன் கருதியும் மேற்படி பணிகள் 26.3.2017 அன்று முடிக்கப்பட்டது.

4.6 அதன்பின்னர், மீதமுள்ள ஒரு சில தளவாட சாமான்கள் உபபண்டக சாலையில் பணி மேற்கொள்ளும்போது பெறப்பட இயலாத நிலையில் இருந்த மேற்படி பணிக்கு உபயோகப்படுத்தப்பட்ட சில தளவாட சாமான்களை பெறுவதற்கான மீதி பணி ஆணை (Balance

Work Order) **24.4.2017** அன்று உபபண்டகசாலை நகர்புறம் தூத்துக்குடியில் பெற்று **24.4.2018** அன்று பணி நிறைவு அறிக்கை (completion Report) மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது.

**4.7** மேற்படி பணி நிறைவு அறிக்கையை வைத்து கணக்கு முடிக்கப்பட்டு பின்னர் விண்ணப்பதாரர் செலுத்திய ரூ.**3,84,640/–** ல் ரூ.**3,53,351/–** செலவு செய்யப்பட்டுள்ளது போக மீதித்தொகையான ரூ.**31,289/–**ஐ விண்ணப்பதாரருக்கு திரும்ப வழங்க இவ்வலுவலகத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**4.8** மேற்கூறிய அனுமதி கடிதத்தில் ஸ்டாம்பு ஒட்டிய முன்பண ரசீது ஒன்றினை உதவி பொறியாளர் / நகர்/ கீழூர்/தூத்துக்குடி அவர்களின் மூலம் சான்றிதழ் உடன் பெறப்பட்டதும் விண்ணப்பதாரருக்கு திருப்பி தரவேண்டிய தொகையான ரூ.**31,289/–**ஐ காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று **14.5.2018** நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.9** திருமதி. மீரா சங்கர் தூத்துக்குடி அவர்களை external member ஆக Honble tnerc மூலம் **2.7.2017** அன்று Nominatte செய்யப்பட்டார். அந்த தருணத்தில் ஒரு Member மட்டும் தான் பணிபுரிந்து வந்தார். இதற்கிடையில் திருமதி. மீரா சங்கர் அவர்கள் சில தவிர்க்க முடியாத காரணத்தினால் Membership-ஐ **12.7.2017** அன்று ராஜினாமா செய்துவிட்டார்.

**4.10** அதன்பிறகு திரு. V. ராஜா, த/பெ வெள்ளைச்சாமி, தூத்துக்குடி அவர்கள் External Member ஆக Honble TNERC மூலம் Nominate செய்யப்பட்டுள்ளார்.

**4.11** **12.7.2017** முதல் **6.2.2018** வரை இரண்டு External Member களும் இல்லாமல் காலியாக இருந்த காரணத்தால் CGRF meetingஐ இவ்வட்டத்தில் நடத்த இயலவில்லை. இதனால் CGRFல் பதிவாகி இருந்த **17** மனுக்கள் திருமதி. எம். காசிக்கனி, தூத்துக்குடி அவர்களின் மனு உட்பட நிலுவையில் இருந்தது.

**4.12** **20.4.2018** அன்று CGRF MEETING நடத்தப்பட்டு அதில் முதல் **2** மனுக்களை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு தீர்வும் காணப்பட்டுள்ளது.

4.13 அதன் பிறகு 19.5.2018 அன்று திருமதி. காசிக்கனி, தூத்துக்குடி அவர்களிடம் மனு எண்.22/17, நாள் 1.12.2017ஐ பரிசீலனை செய்வதற்காக CGRF Meeting கூட்டப்பட்டது. அதற்கான கடிதத்தை Professional Courier Service மூலம் அன்னாருக்கு 17.5.2018 அன்று சார்பு செய்யப்பட்டு CGRF Meetingக்கு அழைக்கப்பட்டது. ஆனால், மனுதாரர் திருமதி. எம். காசிக்கனி அவர்கள் 19.5.2018 அன்று நடைபெற்ற CGRF கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்ற அறிக்கையினை தகவலுக்காகவும் மேற்கொண்டு நடவடிக்கைக்காகவும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**5. எதிர்மனுதாரரின் பதிலுரையின் மேல் மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வ வாதங்கள்–**

5.1 எதிர்மனுதாரர் தான் மேல்முறையீடு செய்தபின் தனக்கு திருப்பித்தரவேண்டிய தொகையான ரூ.31,289 என்று குறைத்து கணக்கீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

5.2 ஆகவே மீதித்தொகை கணக்கீடு செய்ததற்கு ஆதாரமாக கீழ்க்கண்ட ஆதாரங்களை விசாரணை நடைபெறும் நாளன்று தருமாறு கோரியுள்ளார்.

i) வேலைக்கான உத்தரவு முடிக்கப்பட்டு பதியப்பட்ட மத்திய அலுவலகத்தில் உள்ள பதிவேடு.

ii) அனைத்து வரவு செலவுகளுக்கும் பண்டகசாலை மூலம் சரிசெய்யப்பட்ட இரசீதுகளின் நகல்கள் (Requistion and Devolution Copies).

iii) பழைய மற்றும் புதிய பணிக்கான அனுமதி நகல்கள்.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>**

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.6.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 திரு. M. காசிக்கனி அவர்களின் சார்பாக திரு. C. செல்வராஜ் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. எஸ். சரவணன், மேற்பார்வை பொறியாளர் (i/c) /தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 7. கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டின் மேல் செல்லும் உயரழுத்த மின்பாதையை மாற்றித் தருமாறு DCW முறையில் விண்ணப்பித்து அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.3,84,640/– அலுவலகத்தில் செலுத்தப்பட்டதாகவும் ஆனால் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அம்மின்பாதையை மாற்றியமைக்காமல் காலம் தாழ்த்தி 2017 மார்ச் மாதத்தில் புதிய மின்பாதை அமைத்ததாகவும் தெரிவித்தார்.

7.3 ஆனால் மேற்சொன்ன பணிகள் அனைத்தும் முடிந்து ஒரு வருடம் கழிந்த நிலையிலும் மேற்படி பணிகளுக்கான புதிய மதிப்பீடு தயார் செய்து தன்னிடம் அதிகமாகப் பெற்ற பணத்தை திரும்ப வழங்கவில்லையென்றும் ஆகவே, புதிய மதிப்பீட்டின்படி தன்னிடம் அதிகமாகப் பெற்றுள்ள பணத்தை வட்டியுடன் திரும்பப் பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

## 8. கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்

8.1 எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார். மேலும் கேட்புரை நாளில் கீழ்க்கண்ட வாதங்களை எடுத்துரைத்தார்.

8.2 மேல்முறையீட்டாளரின் உயரழுத்த மின்பாதையை மாற்றியமைப்பதற்கான மதிப்பீடு மேற்பார்வை பொறியாளர் அவர்களால் 5.12.2016 அன்று அனுமதிக்கப்பட்டு மின்பாதை மாற்றுவதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.3,84,640/–ஐ மேல்முறையீட்டாளர் 02.01.2017 அன்று நகர் /கீழூர் அலுவலகத்தில் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

8.3 அதன் தொடர்ச்சியாக மேற்படி பணியை மேற்கொள்வதற்குப் பணி ஆணை 9.1.2017 அன்று பெறப்பட்டு 10.1.2017 அன்று உதவி செயற்பொறியாளர்/கட்டுமானம் மற்றும் மேம்பாடு/தூத்துக்குடி அவர்களிடம் மேற்படி பணியை மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டு 26.3.2017 அன்று பணி நிறைவு பெற்றதாகவும் தெரிவித்தார்.

8.4 மேற்படி பணிக்கு உபயோகப்படுத்தப்பட்ட சில தளவாட சாமான்களை பெறுவதற்கான மீதி பணி ஆணை (Balance Work Order) 24.4.2017 அன்று உபபண்டகசாலை நகர்புறம் தூத்துக்குடியில் பெற்று 24.4.2018 அன்று பணி நிறைவு அறிக்கை (completion Report) மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்டதாகவும், அதன்படி மேல்முறையீட்டாளர் செலுத்திய ரூ.3,84,640/– ல் ரூ.3,53,351/– செலவு செய்யப்பட்டுள்ளது போக மீதித்தொகையான ரூ.31,289/–ஐ மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களையும், மற்றும் திரு. கணேசன் அவர்களின் எழுத்துபூர்வமான வாதங்களையும் கருத்தில் கொண்டால், கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு மின்பாதை மாற்றியமைப்பதற்காக செலுத்தப்பட்ட தொகை பணிமுடிந்த நிலையில் நுகர்வோருக்கு மீதி தொகை திரும்ப வழங்குவது குறித்து மின்வழங்கல் விதிகளில் கூறப்பட்டுள்ளது யாது ?

(ii) மேல்முறையீட்டாளருக்கு மின்வழங்கல் விதிகளின்படி நிவாரணம் ஏதும் வழங்க இயலுமா ?

10. <u>வழக்கெழு 1–ற்கான தீர்வு–</u>

10.1 மேல்முறையீட்டாளர் அவருடைய வீட்டின் மேலே சென்ற மின்பாதையை மாற்றியமைத்து தருவதற்கு அவர் செலுத்திய தொகையில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தவிர்த்து மீதமுள்ள தொகையை இதுநாள் வரை தமக்கு வழங்கப்படவில்லையென்று தெரிவித்துள்ளார். ஆகவே விதிப்படி அவருக்கு வழங்கப்பட வேண்டிய மீதித்தொகை வட்டியும் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார்.

10.2 இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(6) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“5(6) மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்–*

*(1) மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்கவேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றக்த் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கவேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றுப்பணி தொடங்கப்படும். மதிப்பீடு பின்வரும் உறுப்பினங்களை உள்ளடங்கும் :–*

*(i) முடிந்தவரை பழைய களத்தில் பிரித்தெடுக்கப்பட்ட பொருள்கள் புதியகளத்தில் உபயோகப்படுத்தல் வேண்டும்.*

*(ii) பிரிக்கப்பட்டு மறு உபயோகத்துள்ளாகும் பொருட்களின் மதிப்பில் 10 சதவீதம் பிரிக்கும் செலவுகள் மற்றும் புதிய களத்திற்கு/பண்டக சாலைக்கு பொருட்களை ஏற்றி, கொண்டு சென்று, இறங்கும் செலவுக்காக அனுமதிக்கப்படும்.*

*(iii) மாற்றல் வேலைகளுக்கான புதிய பொருட்களின் மதிப்பு*

*(iv) புதியு பொருட்களின் மதிப்பில் 5 சதவீதம் புதிய களத்திற்கு பொருட்களை ஏற்றி, கொண்டு சென்று, இறக்க அனுமதிக்கப்படலாம்.*

*(iv) பொருட்களின் தற்போதைய மதிப்பில் 10 சதவீத புதிய களத்தில் பொருட்களின் கட்டுமானத்திற்கு அனுமதிக்கப்படலாம்.*

*(vi) மீட்கப்பட்ட கழிவு பொருட்களின் தற்போதைய மதிப்பின் 5 சதவீதம் கொண்டு செல்லும் செலவிற்காக அனுமதிக்கப்படலாம்.*

*(vii) நுகர்வோர்/விண்ணப்பதாரருக்கு மொத்த வேலை மதிப்பீட்டின் அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டு, கீழ்கண்டவாறு வரவுவைக்கப்படவேண்டும்.*

> *(a) மீட்கப்பட்டு மறு உபயோகப்படும், ஆனால் புதுகளத்தில் உபயோகப்படாத பெருட்களின் மதிப்பில் 20 சதவீதத்திற்கு குறையாத புத்தகமதிப்பு/எழுத்து இறுதி மதிப்பு.*
>
> *(b) மீட்கப்பட்ட ஆனால் மறு உபயோகப்படாத பொருட்களின் கழிவு மதிப்பு, உண்மை மதிப்பின் 10 சதவீதம் குறையாமலிருக்கும்.*

*(viii) வேலை முடிவடைந்தவுடன், பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு ஏற்றி கொண்டு சென்று இறக்குதல், கட்டுமான செலவு ஆகியவற்றை உள்ளடக்கி, மறு மதிப்பீடு செய்து, அதன் நகல் மின் நுகர்வோருக்கு அளிக்கப்படும். முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால், மீதி தொகை விண்ணப்பதாரர்/ நுகர்வோருக்கு மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படும். முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால், வேறுபாட்டுத்தொகை விண்ணப்பதாரர்/நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யப்படுதல் வேண்டும்.''*

**10.3** மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும்பொழுது நாம் அறிவது மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்கவேண்டும் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும் என்றும் மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்கவேண்டும் என்றும் தெரிகிறது. அவ்வாறு அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றுப்பணி தொடங்கப்படும் என்றும் தெரிகிறது. அந்த மதிப்பீட்டின்படி **1 (i)** முதல் (vii) வரை உறுப்பினங்களை உள்ளடங்கிய பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிகிறது.

**10.4** மேலும் மதிப்பீட்டின்படி வேலை முடிவடைந்தவுடன் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பு ஏற்றிக்கொண்டு சென்று இறக்குதல், கட்டுமான செலவு ஆகியவற்றை உள்ளடக்கி, மறு மதிப்பீடு செய்து அதன் நகல் மின் நுகர்வோருக்கு அளிக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால் மீதி தொகை விண்ணப்பதாரர்/ நுகர்வோருக்கு மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படவேண்டுமென்றும் ஆனால், முதல் மதிப்பீடு மறு மதிப்பீட்டை விட குறைவாக இருந்தால் வேறுபாட்டுத்தொகை விண்ணப்பதாரர்/நுகர்வோரிடமிருந்து வசூல் செய்யப்படுதல் வேண்டும் என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

**10.5** மேற்கண்ட பத்தி **10.3** மற்றும் **10.4** உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்காக விண்ணப்பதாரர்/நுகர்வோர் செலுத்திய முதல் மதிப்பீட்டிற்கான கட்டணமானது மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால் மீதி தொகை விண்ணப்பதாரர்/நுகர்வோருக்கு பணிமுடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படவேண்டுமென்று என்று நான் கருதுகிறேன்.

11. <u>வழக்கெழு 2–ற்கான தீர்வு–</u>

11.1 எதிர்மனுதாரர் தான் மேல்முறையீடு செய்தபின் தனக்கு திருப்பித்தரவேண்டிய தொகையாக ரூ.31,289/– என்று குறைத்து கணக்கீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஆகவே தான் கேட்டுக்கொண்டதிற்கிணங்க கணக்கீடு செய்ததற்கான ஆதாரங்களை அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

11.2 கேட்புரையில் கலந்து கொண்ட எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் கோரிய அனைத்து ஆவணங்களையும் அளித்தார். ஆவணங்களை பெற்றுக்கொண்ட மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரர் செய்த கணக்கீட்டை சரிபார்க்க தனக்கு சில நாட்கள் அவகாசம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எதிர்மனுதாரரும் சரியான மீதித்தொகையை மறுகணக்கீடு செய்து மேல்முறையீட்டாளரிடம் தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது.

11.3 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையின் படி அவருக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டு மறுமதிப்பீட்டு கணக்கீட்டை சரிபார்த்து கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது. அதன்பின் மேல்முறையீட்டாளர் மேற்பார்வை பொறியாளர்/தூத்துக்குடி அவர்களுக்கு முகவரியிடப்பட்ட அவருடைய 19.06.2018 நாளிட்ட கடிதத்தில் எதிர்மனுதாரரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களின்படி அவருக்கு ரூ.1,10,460/– வரவேண்டியிருப்பதாக கணக்கீடு செய்து அதன் நகலையும் மின்குறைத்தீர்ப்பாளரிடம் சமர்பித்துள்ளார். மேலும் மேற்படி பணத்தை வட்டியுடன் விரைவில் வழங்கவும் கேட்டுக்கொண்டார்.

11.4 எதிர்மனுதாரர் தன்னுடைய 19.07.2018 நாளிட்ட கடிதத்தில் as per field condition and actual pole schedule –படி உயர் மின்னழுத்த பாதையை மாற்றித்தர வேண்டி மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகையில் மீதமுள்ள தொகையினை மறு கணக்கீடு செய்து மேல்முறையீட்டாளருக்கு ரூ.1,10,619/– திரும்ப வழங்கவேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

11.5 மேல்முறையீட்டாளர் மின்குறைத்தீர்ப்பாளருக்கு முகவரியிடப்பட்ட தன்னுடைய 26.07.2018 நாளிட்ட கடிதத்தில் எதிர்மனுதாரரின் 19.07.2018 கடிதத்தின்படி செய்யப்பட்ட மறுகணக்கீட்டு தொகையான ரூ.1,10,619/–ஐ பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளதால் எதிர்மனுதாரரின் மறு கணக்கீட்டை அவர் ஏற்றுக்கொண்டதாக நான் தீர்வு செய்கிறேன்.

11.6 மேல்முறையீட்டாளர் அவருடைய 19.06.2018 நாளிட்ட கடிதத்தில் அவருக்கு சேரவேண்டிய தொகையை வட்டியுடன் வழங்க கேட்டுக்கொண்டுள்ளார். பத்தி 10.5–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மின்னிணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்காக விண்ணப்பதாரர்/நுகர்வோர் செலுத்திய முதல் மதிப்பீட்டிற்கான கட்டணமானது மறு மதிப்பீட்டைவிட அதிகமாக இருந்தால் மீதி தொகை விண்ணப்பதாரர்/நுகர்வோருக்கு பணிமுடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் அளிக்கப்படவேண்டும். இவ்வழக்கில் எதிர்மனுதாரர் மேற்கண்ட பணிகளை 26.03.2017 அன்று நிறைவு செய்துள்ளார், அதன்படி எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு 26.06.2017–க்குள் மீதித்தொகை மறுமதிப்பீடு செய்து வழங்கியிருக்கவேண்டும். ஆகவே எதிர்மனுதாரர் அவருடைய 19.07.2018 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேல்முறையீட்டாளருக்கு சேரவேண்டிய மீதித்தொகையான ரூ.1,10,619/– ஐ தற்பொழுது ஆணையம் அனுமதித்துள்ள காப்புத்தொகைக்கு வழங்கிவரும் வட்டி வீதத்தில் 26.06.2017 முதல் திரும்ப வழங்கும் நாள்வரை வட்டி கணக்கீடு செய்து வழங்கவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.7 மேலும், மேல்முறையீட்டாளர் அவருடைய 29.06.2017 நாளிட்ட விண்ணப்பத்திற்கு பதில் தராமல் இருந்ததற்குரிய விதிப்படியான இழப்பீட்டை வழங்கவும் கோரியுள்ளதால், இந்த கோரிக்கை சம்பந்தமாக கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் விதிகளுக்கான ஒழுங்குமுறைவிதிகள் 17ஐ ஆராய விரும்புகிறேன்.

***"17. Responding to Consumer's Complaint –***

*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter"*

**11.8** மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதித்தொகுப்பின் விதி 17ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, நுகர்வோர் எவரும் சம்பந்தப்பட்ட பகுதி பொறியாளருக்கு எழுத்து வடிவில் முறையீடு செய்தால் அந்த சம்பந்தப்பட்ட பொறியாளர் கடிதத்தை பெற்ற 10 நாட்களுக்குள் பதில் அனுப்ப வேண்டும். பகுதிப் பொறியாளர் இடத்தினை பார்வையிட அல்லது பிற அலுவலரிடம் கலந்து ஆலோசனை செய்ய விரும்பும் நேர்வில் நுகர்வோருக்கு ஏன் பதில் அனுப்ப முடிய வில்லை என்பதை விளக்க வேண்டும். மற்றும் அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி, தொலைபேசி, எண் ஆகியவற்றை தெரிவிக்கவேண்டும். பகுதிப்பொறியாளர், முறையீட்டு கடிதம் பெற்ற இருபது நாட்களுக்குள் நுகர்வோருக்கு போதிய பதிலுரை அனுப்பப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

**11.9** மேல்முறையீட்டாளர் அவரின் கோரிக்கை சம்பந்தமாக 29.06.2017 அன்று உதவி மின் பொறியாளர்/விநியோகம்/நகர்/கீழூர் அவர்களிடம் முறையீடு செய்துள்ளார். அந்த முறையீட்டில் உள்ள கோரிக்கை சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் இல்லாததால் தூத்துக்குடி மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு மனுசெய்து இழப்பீடு கோரியுள்ளார். ஒழுங்குமுறை விதி 17–ன்படி மேல்முறையீட்டாளருக்கு சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர் 10 நாட்களுக்குள் உரிய பதில் அளித்திருக்க வேண்டும் அல்லது மனுவிற்கான பதிலை அவர் கள ஆய்வு செய்து அல்லது வேறு அலுவலரின் ஆலோசனையை பெற்று பதில் தரப்படவேண்டும் எனில் 20 நாட்களுக்குள் பதில் அனுப்பியிருக்க வேண்டும். இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 28.11.2017 அன்று மனு செய்த பின்பு 14.05.2018 அன்றுதான் பதில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளருக்கு பதில் தருவதில் 11 மாதங்கள் கால தாமதம் உள்ளது என்று தெரிகிறது.

**11.10** விதிக்கப்படுகிற செயல்திறனை உரிமைதாரர் அடையாவிட்டால் பாதிக்கப்பட்ட நுகர்வோர், உரிமைதாரரிடமிருந்து சட்டத்தில் விதிக்கப்பட்ட ஈட்டுத்தொகையை பெற தகுதியுடையவர் ஆகின்றார். ஈட்டுத்தொகையை பற்றித் தெரிந்துகொள்ள தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் விதிகளுக்கான ஒழுங்குமுறை விதித்தொகுப்பின் விதி 21(6) ஆராய வேண்டும். அந்த விதித்தொகுப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"21. Compensation: The Licensee is expected to achieve the performance prescribed. If a Licensee fails to meet the standards specified for various service areas, the affected consumer is entitled for compensation by the Licensees as stipulated in the Act. The compensation payable is set out in the table below, namely:-*

| S.No. | Events | Compensation payable |
|---|---|---|
| 1 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 2 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 3 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 4 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 5 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |
| 6 | Responding to consumer's complaints | Rs.25/- for each day of delay subject to a maximum of Rs.250/- |
| 7 | xxxx xxxxx xxxx xxxxx | xxxx xxxxx xxxx xxxxx |

**11.11** மேற்கண்ட விதி **21(6)**ன் படி நுகர்வோரின் முறையீடுகளுக்கு பதில் தராமல் இருந்தால் ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் ரூ.**25/–** வீதம் பெருமமாக ரூ.**250/–** வரை ஈட்டுத்தொகை வழங்கலாம் என்று உள்ளது. மேல்முறையீட்டாளரின் **29.06.2017** நாளிட்ட முறையீட்டிற்கு **14.05.2018** அன்றுதான் பதில் பெறப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளர் பெருமமாக ரூ.**250/–** வரை ஈட்டுத்தொகை பெற தகுதியுள்ளவர் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12.** **<u>முடிவுரை:</u>**

**12.1** என்னுடைய வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வின்படி எதிர்மனுதாரரின் **19.07.2018** நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேல்முறையீட்டாளருக்கு சேரவேண்டிய மீதித்தொகையான ரூ.**1,10,619/–** ஐ தற்பொழுது ஆணையம் அனுமதித்துள்ள காப்புத்தொகைக்கு வழங்கிவரும் வட்டி வீதத்தில் **26.06.2017** முதல் திரும்ப வழங்கும் நாள்வரை வட்டி கணக்கீடு செய்து வழங்கவேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட தொகையை அவருக்கு காசோலையாக வழங்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

12.2 மேல்முறையீட்டாளரின் 29.06.2017 நாளிட்ட முறையீட்டிற்கு 14.05.2018 அன்றுதான் பதில் பெறப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளர் பெருமமாக ரூ.250/– வரை ஈட்டுத்தொகை பெற தகுதியுள்ளவர் என்று தீர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட ஈட்டுத்தொகையை அவருக்கு காசோலையாக வழங்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

12.3 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் இந்த தீர்வு கிடைக்கப்பெற்ற 45 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவு இடப்படுகிறது.

12.4 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 10/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. ஆ. காசிக்கனி,
4/360/2, 10வது தெரு,
முத்தம்மாள் காலனி,
தூத்துக்குடி – 2

2) மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டையபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001.

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

4) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.